**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.4**
**<u>OS.NO.129/2019</u>**

**Name** : குப்பன்

**Father Name** : குப்பகவுண்டர்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 7.8.2024

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். பிரதிவாதி ஆஜர்.

<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

காலஞ்சென்ற கோவிந்தசாமி கவுண்டர் என் மாமனார். கோவிந்தசாமி கவுண்டர் எழுதி வைத்த 3 தானசெட்டில்மெண்ட் பத்திரத்திலும் நான் இன்னார் என்று அடையாளம் காட்டப்பட்ட இடத்தில் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால், (சாட்சி சொல்கிறார் அந்த 3 பேருக்கும் கொடுப்பதாக சொல்லி தான் என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டனர்). சாமிநாதன் மற்றும் அவருடைய சகோதரர்கள் அவரவர்களுக்கு தானசெட்டில்மெண்ட் மூலம் கொடுக்கப்பட்ட சொத்தை அவரவர்கள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். சாமிநாதன் தனக்கு வந்த தானசெட்டில்மெண்ட் சொத்தான 30 செண்டை 1ம் வாதி சாந்தியின் மருமகளுக்கு சாமிநாதன் தானசெட்டில் மெண்ட கொடுத்திருக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. சுமதி சாமிநாதன் மகள் என்றால் சரிதான். சுமதி வெங்கடேசனை திருமணம் செய்துகொண்டிருக்கிறார் என்றால் சரிதான். வெங்கடேசன் சாந்தியன் மகன் என்றால் சரிதான் .அந்த இடத்தில் தான் சுமதி வீடு கட்டியிருக்கிறார் என்றால் சரிதான்.

பிரதிவாதிகளுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்தது அனைவருக்கும் தெரியும் என்று சொன்னால் சரியல்ல.அந்த தானசெட்டில்மெண்ட் நடைமுறைக்கு வந்துவிட்டது என்றால், இவ்வாறு செய்திருக்கிறார்கள் என்று நாங்கள்போய் கேட்டதற்கு நாங்கள் உங்களுக்கு செய்து வைக்கிறோம் என்றும், எங்கள் மீது நம்பிக்கையில்லை என்றால் தானசெட்டில்மெண்ட் பத்திரங்களை வைத்துக்கொள்ளுங்கள் என்று பூங்கொடியிடம் கொடுத்தார்கள். பூங்கொடிக்கு பிரதிவாதிகள் கொடுத்ததாக தவறாக சொல்கிறேன்எ ன்றால சரியல்ல என் எதிரில் தான் கொடுத்தார்கள். வாதிகள பாகம் கேட்பதற்குஅறுகதையில்லை என்று சொன்னால சரியல்ல. வாதிகளுக்கு பவ்வயப்பட்டு பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.